DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.12**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ராஜா |
| Father Name | : | முருகானந்தம் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 3, 4, 5, 6, 8, 10, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 எதிரிகள் ஆஜர். 9வது எதிரி ஆஜர் இல்லை. 9வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை முத்துபட்டியில் வசித்து வருகிறேன். நான் தனியார் டிரைவராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சுரேஷ்பாபு என்பவரை எனக்கு தெரியும். நான் சம்பவ சமயத்தில் இறந்துபோன சுரேஷ்பாபு என்பவர் வீட்டில் டிரைவராக வேலை செய்து வந்தேன். **அ.சா.8** ரோகிணிமீனா மற்றும் அவருடைய மகள் **அ.சா.9** ஸ்ரீவர்ஷினி என்பவர்களை எனக்கு தெரியும். என்னிடம் இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் சுரேஷ்பாபு விபத்து ஏற்பட்டு உட்கார்ந்திருப்பதாக என்னிடம் சொன்னார். நான் இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அங்கு சென்று பார்த்தேன்.சுரேஷ்பாபு அங்கு இறந்துகிடந்தார். எனக்கு வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 31.01.2013ம் தேதி மதியம் நான் வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் 04.50 மணிக்கு வீட்டிற்கு வந்தேன் என்றும், அப்போது சுரேஷ்பாபு அண்ணன் அலுவலகத்திற்கு போய்விட்டதாக வாட்ச்மேன் சொன்னார் என்றும், 05.30 மணிக்கு சுரேஷ்பாபுவின் மகள் ஸ்ரீவர்ஷினி படிக்கும் டிவிஎஸ் பள்ளிக்கு சென்று அவரை அழைத்து வரச்சென்றேன் என்றும் அவரை வீட்டில் கொண்டு வந்துவிட்டுவிட்டு 06.30 மணிக்கு ஸ்ரீவர்ஷினிக்கு டியூசன் எடுக்கும் மிஸ்ஸ எல்லீஸ் நகர் சென்று அழைத்து வந்து 07.00 மணிக்கு சுரேஷ்பாபு வீட்டில் விட்டு விட்டு நான் கார் ஷெட்டில் இருந்த டிவியை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றும் அப்போது சுமார் 07.50 மணிக்கு டூவிலரில் வந்த ஒரு நபர் என்னிடம் உங்க வண்டி அக்சிடென்ட் ஆகி கிடக்கு அண்ணன் சுரேஷ்பாபு இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார் என்று சொன்னார் என்று நான் போய் பார்த்த போது இரத்த வெள்ளத்தில் குப்புற கிடந்தார் என்றும், அதன் பின்பு வீட்டில் இருந்த ரோகிணி அக்கா போன் செய்து கேட்ட போது சுரேஷ்பாபுவை கொலை செய்துவிட்டு சென்ற விபரத்தை அவர்களிடம் தெரிவித்தேன் என்றும், பின்னர் அக்கா ரோகிணி மீனா அங்கு வந்து மார்பில் அடித்து கதறினார் என்றும், போலீஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.11 14:46:38 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.